**கவனிக்க.-** *2016.03.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1958 - 2016 මාර්තු මස 11 වැනි සිකුරාදා - 2016.03.11**

*1958 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 770 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

**வடமேல் மாகாண மாகாண சபை**

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, சமூக நல, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, மகளிர் நடவடிக்கை மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு

வடமேல் மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆரம்ப மட்ட பகுதி தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட வடமேல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2016.03.25 ஆந் திகதிக்கு முன் வெளிவாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

வடமேல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள பதவிகள் :

ஆரம்ப மட்ட பகுதி தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பதவிகள்

1. தச்சுத் தொழிலாளி
2. குழாய் நீர் தொழிலாளர்
3. தையல் பணிப்பெண்
4. ஆய்வுகூட உதவியாளர்

ஆரம்ப தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பதவி

1. மின் தொழிலாளி

(1) **தகைமைகள் :**
(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் வடமேல் மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்.
(3) விண்ணப்பதாரி சிறந்த குணவியல்புகளையுடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) **கல்வித் தகைமைகள் :**
ஆரம்ப மட்ட பகுதி தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள்

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடமாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆரம்ப தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பதவிகள்

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்தது இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் ஒரே அமர்வில் 5 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) **தொழில்நுட்பத்திறமை :**
1. தச்சுத்தொழிலாளி : பதவிக்குரிய தொழில் பற்றிய NVQ 2 அல்லது NVQ 3 நிலையில் திறமை பெற்றிருத்தல்.
2. குழாய் நீர் தொழிலாளி : பதவிக்குரிய தொழில் பற்றிய NVQ 2 அல்லது NVQ 3 நிலையில் திறமை பெற்றிருத்தல்.
3. தையல் பணிப்பெண் : பதவிக்குரிய தொழில் பற்றிய NVQ 2 அல்லது NVQ 3 நிலையில் திறமை பெற்றிருத்தல்.
4. மின் தொழிலாளி : பதவிக்குரிய தொழில் பற்றிய NVQ 3 நிலையில் திறமை பெற்றிருத்தல்.

(4) **அனுபவம் :**
ஆரம்ப பகுதி தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி -

ஒவ்வொரு தொழில்களுக்குரிய துறையில் அரச நிறுவனமொன்றில்/அரச கூட்டுத்தாபனம்/சபை/நியதிச் சபையில் அல்லது வேறு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

ஆரம்ப தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி -

ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிய துறையில் 3 வருட கால அனுபவம் இருத்தல். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

(5) **வயதெல்லை :** 2016.03.25 ஆந் திகதிக்கு வயது 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(6) **தேர்ந்தெடுக்கப்படும் முறை :**
ஆரம்ப பகுதி தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி -

விண்ணப்பப்படிவம் பரிசீலிக்கப்பட்ட பின்பு நேர்முகப் பரீட்சை மூலம் தகைமையுடையவர்களை தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஆரம்ப தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி -

விண்ணப்பப்படிவம் பரிசீலிக்கப்பட்ட பின்பு தொழிற் திறமை பற்றிய நேர்முகப் பரீட்சை மூலம் மற்றும் தொழிற் திறமையினை உறுதிப்படுத்திக்கொள்ளும் பரிசீலனையின் பெறுபேறுபடி தகைமையுடையவர்களை தேர்ந்தெடுக்கப்படுவர்.

(7) **சம்பளத்திட்டம் (மாதாந்தம்) :**
ஆரம்ப பகுதி தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி -

PL 2 - 2006 A, ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600

ஆரம்ப தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி -

PL 3 - 2006 A, ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860

(8) **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனை :**
(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது;
(ii) நியமன திகதி தொடக்கம் மூன்று வருட காலம் நன்னடத்தை காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(9) **விண்ணப்பித்தல் :**
(i) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கு அமைய ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2016.03.25 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் "செயலாளர், வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, சமூகநல, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, மகளிர் நடவடிக்கை மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு, 3 ஆம் மாடி, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்;

(ii) பூர்த்தியற்ற, தகைமையற்ற மற்றும் உரிய திகதியின் பின்பு கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது பற்றி அறிவிக்கப்படமாட்டாது;

(iii) விண்ணப்பப்படிவம் அனுப்புகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரினை குறிப்பிடப்படல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறு விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(10) **பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான முறை :**
வடமேல் மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆரம்ப மட்ட பகுதித் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த ஆட்சேர்ப்பு செய்யப்படும். பதவிக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய ஏற்பாடுகள் உரியவாறே அதிகாரப்படுத்தப்படும்.

ரி. பீ. விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார, தேசிய வைத்திய, சமூகநல,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை,
மகளிர் நடவடிக்கை மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு,
வடமேல் மாகாணம்.

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய,
சமூகநல, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை,
மகளிர் நடவடிக்கை மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு,
3 ஆம் மாடி,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2016, பெப்புருவரி 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண சபை அரச சேவையில் மாகாண சுகாதார திணைக்களத்தில் ஆரம்ப மட்ட பகுதி தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெற்ற சேவைத் தரத்திலான பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்**

1. விண்ணப்பிக்கின்ற பதவி :----.
2. தனிப்பட்ட தகவல்கள் :----.

   2.1 முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
   2.2 முழுப்பெயர் :----.
   2.3 சொந்த முகவரி :----.
   2.4 கிராம அலுவலர் பிரிவு :----.
   2.5 பிரதேச செயலாளர் பிரிவு :----.
   2.6 வடமேல் மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பு :----.
   2.7 ஆண்/பெண் : பால் :----.
   2.8 திருமணமானவரா, திருமணமாகாதவரா என்பது பற்றி :----.
   2.9 தேசிய இனம் :----.
   2.10 தேசிய ஆள் அடையாளட்டை இலக்கம் :----.
   2.11 பிறந்த திகதி :----.
   2.12 தொலைபேசி இலக்கம் :----.
3. கல்வித்தகைமை :----.
4. தொழில்நுட்ப திறமை :----.
5. சேவை அனுபவம் :----.
6. வேறு தகைமைகள் :----.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-250

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.